பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 11 வியாழக்கிழமை (26-11 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 364

# கொழும்பில் தாக்குதல் பீதி! படைகள் உஷார் நிலையில்!!

## பிரமுகர்கள், படை அதிகாரிகளின் நடமாட்டத்துக்கும் கட்டுப்பாடு

கொழும்பு, நவம்பர். 26

**கொழும்பு மாநகரின் பாதுகாப்புக்கு தற்போது பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இதனையடுத்து முப்படையினரும் பொலிஸாரும் கடும் எச்சரிக்கையுடன் கூடிய உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். முக்கிய அரசியல் பிரமுகர்கள், சிரேஷ்ட படை அதிகாரிகள் ஆகியோரினது நடமாட்டத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது.**

செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவல்களை வெளியிட்டன.

கொழும்பு மாநகரின் பாதுகாப்புக்கு தற்போது ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் போன்று கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டது இல்லை என்று பாதுகாப்பு வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தெரிவித்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீராவைப் பிடித்துக் கொன்றதைத் தொடர்ந்து, அரசுக்கு ஏற்பட்ட பாதுகாப்பு பயமுறுத்தல் முடிவுக்கு வந்ததாகக் கருதப்பட்டது.

அமைச்சர் ரஞ்சன் படுகொலை, கூட்டுப்படைகள் தலைமையகக் கட்டிடம் மீதான தாக்குதல் ஆகியவற்றின் பின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அவ்ரோ நோட்டம்

நேற்று பிற்பகல் 2 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று நாவற்குழி, அரியாலை, சாவகச்சேரிப் பகுதிகளின் மேலாக சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

அதேசமயம் பொம்மர்களும் நேற்று வளலாய், தொண்டமானாறு, அச்சுவேலி, ஒட்டகப்புலம், பலாலிப் பகுதிகளிலும் காணப்பட்டன.

(இ-162-117-17-15-5)

## மாவீரர் புகழுடல்களுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26

பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதி இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த 46 போராளிகளுக்கும் குடாநாட்டில் நேற்று உருக்கமான அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுக் காலை இடம்பெற்ற கொடியணைக்க நிகழ்வுகளின் போது 46 வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை 10 மணி வரை வீடுகளில் வைக்கப்பட்டிருந்த புகழுடல்கள் பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வலிகாமம் கோட்டத்தில் சுன்னாகம் மத்திய சந்தையிலும்—

தென்மராட்சிக் கோட்டத்தில் சாவகச்சேரி சந்தையிலும்—

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை நகர்ப் பகுதியிலும் — இந்த மாவீரர்களின் புகழுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

சிறுவர், குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை இயங்கா

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை கூட்டுறவுச் சங்கங்கள், பொதுச்சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கமாட்டா என்று அறிய வந்துள்ளது.

சைக்கிள் திருத்தும் நிலையங்களும், தேநீர் மற்றும் உணவு நிலையங்களும் மட்டுமே மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்வோரின் வசதி கருதித் திறக்கப்பட்டிருக்கும்.

(அ-17)

## குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தவர் சிவகுமாராம்

கொழும்பு, நவ. 26

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தம்மிடம் இருந்த கைக் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்த நபர் சிவகுமார் என அடையாளம் காணப்பட்டார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

கொழும்பில் தற்போது இயங்கி வரும் விடுதலைப் புலிகள் இராணுவப் பிரிவின் பிரதித் தலைவர் இவர் என பொலிஸ் புலனாய்வில் இருந்து தெரியவருவதாகவும்—

கறுவாக்காடு விஜேராம

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரல் விசேட ஒலிபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் சுடர் ஏற்றும் வைபவத்தை முன்னிட்டு "புலிகளின் குரல்" வானொலியில் இன்று வியாழன் இரவு 9.00 மணிமுதல் 12.30 மணி வரை விசேட ஒலிபரப்பு இடம்பெறவுள்ளது. (இ-5)

## சிறில் மத்யூவின் வீட்டினுள் புகுந்தே வெடிக்க வைத்தார்

கொழும்பில் கடந்த செவ்வாயன்று கைக்குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தவர் முன்னாள் அமைச்சர் சிறில் மத்யூவின் வீட்டுக்குள் புகுந்தே கைக்குண்டை வெடிக்க வைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு திம்பிரிகஸ்யாய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் விஜேராம மாவத்தையில் நடமாடுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே பொலிஸார் அன்று உஷார்ப்படுத்தப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திம்பிரிகஸ்யாய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாஸாவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் படுகாயம் அடைந்தது தெரிந்ததே. (இ-அ)

## குண்டு வெடிப்பினால் அனுராதபுரம் அதிர்ந்தது

கொழும்பு, நவ. 26

அனுராதபுரம் விமானப் படை முகாமில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது.

இது இராணுவத்தால் தயாரிக்கப்பட்ட குண்டு எனவும் தற்செயலாக வெடித்ததாகவும் கூறப்பட்டது.

இக் குண்டு வெடித்த போது அனுராதபுரம் நகரம் அதிர்ந்ததாகவும், ஆயினும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ-6)

### 53 படையினர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 26

பலாலி கிழக்குப் பகுதியில் கடந்த திங்கள் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்து இருக்கிறது.

சமீப காலங்களில் ஒரே நாள் தாக்குதலில் இந்தளவு எண்ணிக்கையில் படையினர் உயிரிழந்தது இச் சம்பவத்தில் தான் என ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-எ)

### ராஜ்ய சபையில் நேற்று

# எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அ. தி. மு. கவும் வெளிநடப்பு!

### காங்கிரஸுடனான கூட்டு உடையுமா?

புதுடில்லி, நவ. 26

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து, அதன் இந்திரா காங்கிரஸின் தோழமைக் கட்சியான அ.தி.மு.க. எம்.பிக்கள் முதல் தடவையாக எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ராஜ்ய சபைக் கூட்டத்தில் இருந்து நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

இதற்கு முன்பதாக அ.தி.மு.க. எம்.பி திரு. ஜி. சுவாமிநாதன் ராஜ்ய சபைக் கூட்டத்தில் பேசுகையில் மத்திய அரசு தமது புதிய பொருளாதாரக் கொள்கைகளை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அ.தி.மு.க. உட்பட எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தபோது பாரதிய ஜனதாக் கட்சி அதில் கலந்து கொள்ளவில்லை.

## காங்கிரஸ் அரசுக்கு எதிராக டில்லியில் மாபெரும் பேரணி

புதுடில்லி, நவ. 26

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான அரசின் பொருளாதார சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் பேரணி ஒன்று புதுடில்லியில் நேற்று நடத்தப்பட்டது.

பேரணிகளுக்கு எல்லாம் தாய்ப்பேரணி என்று வர்ணிக்கப்பட்ட இப்பேரணியில், குறைந்தது மூன்று லட்சம் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேரணியை மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக நடத்தின

(இ-எ)

# நினைவொலியுடன் அஞ்சலி சுடர் ஏற்றுதலுடன் மாவீரருக்கு இன்று நடுச்சாம நேர அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26

தாயக மண்ணினதும், மக்களதும் விடிவுக்காகத் தமது இன்னுயிர் நீத்த மாவீரர்களின் நினைவாகக் கொண்டாடப்பட்டு வரும் மாவீரர் வாரத்தின் இறுதிக் கட்ட சிறப்பு நிகழ்வுகள் இன்று நள்ளிரவு தாண்டும் நேரத்தில் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி 1 நிமிடத்தில் [illegible] தமிழீழம் எங்கும் சகல [illegible] காலத்தில் அனைத்து ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் உள்ள மணிகள் 2 நிமிட நேரம் நினைவொலி எழுப்பும். அந்நேரத்தில் சகல மக்களும் எழுந்து நின்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவார்கள். அவ்வேளை வீதியால் செல்லும் மக்கள் அந்த இடத்திலேயே நின்று அஞ்சலி செலுத்துவர். [illegible] 1 நிமிடத்திற்கு மாவீரர் நினைவொலியை ஒரே சீரான முறையில் ஒலிக்கச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்றவாறு அனைவரும் நினைவொலியை ஒரே சமயத்தில் எழுப்ப வசதியாகக் கடிகாரங்களை குறித்த நேரத்திற்குச் சீர்செய்து தயார்படுத்தி வைக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அறிவித்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

**தாய்மண் மீட்க உறுதி எடு**
**தாயகமண் எங்கும் மரங்கள் நடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகயஞ்ஞ அழைப்பிதழ்

16-11-92 திங்கள் அன்று காரைநகரில் சிவபதம் அடைந்த எமது தந்தையாரும், சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள், திருமதி சௌந்தரம்பிகை சிவசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரின் மைத்துனருமாகிய

## அமரர் கார்த்திகேய ஐயர் விஸ்வநாதக் குருக்கள்

அவர்களின் தசாக கிரியைகள் நடைபெற்று 28-11-1992 சனிக்கிழமை கிரகயஞ்ஞம் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை, மானிப்பாய்.

இங்ஙனம்
வி. ஈஸ்வரக் குருக்களும் சகோதரர்களும்.

[23391]

# கண்ணீர் அஞ்சலி

22 - 11 - 92 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்திய வேலாயுதம் வீரவாகு அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அன்னார் யாழ் / கொட்டடி நமசிவாய வித்தியாலய ஆசிரியை மல்லிகா ஞான பண்டிதனின் அன்புத் தந்தையார் ஆவார்.

அதிபர், ஆசிரியர்கள்.

(5601)

யா/கோண்டாவில் சி. சி த. க. பாடசாலை
எமது வித்தியாலய பழைய மாணவன், மறத்தமிழன் கர்மவீரன், மாவீரன்
செல்வன் நடராஜா சிவபாலன் (ஜீவன்)
அவர்களின்

# 'மாட்சி நயப்பு அரங்கு'



வீரவேங்கை 2 ஆம் லெப்டினனட்
## ந. சிவபாலன் (ஜீவன்)

மைந்தனாய்: 15-12-1975 மாவீரனாய்: 11-07-1991

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 1992-11-27 வெள்ளிக்கிழமை காலை 9 00 மணி

தலைமையுரை:
இ. சிவபாதசேகரம் (அதிபர்)
மௌனஅஞ்சலி

மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுதல்
மாட்சி நயப்புப் பேருரையாளர்:-

திரு. த. இ. பாலசுந்தரம்
திரு. ந சபாலிங்கம்
திரு. க திருநாவுக்கரசு (அதிபர்)
திரு. க லோகநாதன் (அதிபர்)
திரு. செ சத்தியமூர்த்தி J P.
திரு. க. மகேஸ் (அதிபர்)
திரு. செ. நடராஜா J. P.
திரு. க ஞானசேகரம் (இளைப்பாறிய அதிபர்)
திரு. க. பேரம்பலம் (கொத்தணி அதிபர்)
திரு. வ. நாகன்னா (கொத்தணி அதிபர்)
திரு. இ. மகேந்திரன் (கொத்தணி அதிபர்)
திரு. நா. குழந்தைவேலு (மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர்)

மாட்சிநயப்புப் பேருரையை ஏற்போர் உரை:

திரு. நடராஜா (தந்தை)
மாவீரர் குடும்பம், போராளிகள் பெற்றோர், மற்றும், அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பாடசாலை முகாமைத்துவக் குழுவும்,
திரு. நா. நடராசா குடும்பத்தினரும்.

(5600)

# மாவீரர் வரலாற்றை முழுமைப்படுத்தி சரித்திரமாக்கி சந்ததிக்கு நல்குவோம்

தேச விடுதலைக்காக மரணித்த மாவீரர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று. இவ்வெழுச்சி நாளே, தமிழீழத்தின் தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவதாக வீரச்சாவெய்திய மாவீரர் சத்தியநாதன் (சங்கர்) நினைவு நாளான நவம்பர் 27ஐ தமிழீழ தேசம் மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்துள்ளது. வருடம் தோறும் இப்புனித நாளினை தமிழினம் உணர்வுபூர்வமாகக் கொண்டாடுகிறது — நினைவு கூருகிறது.

மாவீரர் நாளானது மாவீரர் வாரமாக தமிழீழமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது எழுச்சிமிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21இல் தொடங்கியது; நவம்பர் 27இல் முடிவடைகிறது.

இம்மாவீரர் வாரத்தினைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 21 நாளுக்கு முன்னதாகவே தமிழீழமெங்கும் புனிதப்படுத்தப்பட்டது மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள் ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள் காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிட்டனர் இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு தமிழீழ நாடு புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

### கொடியேற்றத்துடன் ஆரம்பம்

ஆரம்ப நாளான 21ஆம் திகதி காலை 9-00 மணிக்கு கொடி ஏற்றத்தைத் தொடர்ந்து மாவீரர் வார கொண்டாட்டம் ஆரம்பமாகியது. தமிழீழம் முழுவதும் எழுச்சிக்கோலம் பூண்டு பொலிவுடன் விளங்குகிறது. அனைத்து தமிழ் மக்களும் அலங்கரிப்பு நிகழ்ச்சியிலும், அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொள்கிறார்கள்

இன்றும் நாளையும் தமிழீழ மக்கள் அனைவரும் தமது வேறு பணிகளை விடுத்து மாவீரர் புனித நாளினை எதிர்கொள்வார்கள். இன்று வியாழக்கிழமை நள்ளிரவு 12 00 மணி தாண்டும்போது மாவீரர் நாள் உதயமாகின்றது இந்த உதயகாலமானது மிகவும் உணர்ச்சி பூர்வமானது. நாடு முழுவதிலுமுள்ள ஆலயங்கள், தேவாலயங்கள் அனைத்தும் இந்த நேரத்தில் நினைவொலி எழுப்ப மாவீரர் சுடரேற்றும் வைபவம் நிகழும். நினைவொலி எழுப்பப்படும் நேரத்தில் மக்களனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன வணக்கம் செய்வார்கள்.

### சுடரேற்றல்

சுடரானது அகலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்களும் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப் பரவும், சுடர் ஏற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும் வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழம் எங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிரவேண்டும்.

இந்தச் சுடரேற்றும் வைபவமானது விடுதலைப் பாதைக்கு உறுதியையும் உணர்வையும் கொடுத்து நிற்கும். எமது மண்மீட்புப் போரில் தம் முயிரை அர்ப்பணித்துவிட்ட காவியமான எம் மாவீரர்களின் வரலாற்றை முழுமைப்படுத்தி ஆவணப்படுத்திச் சரித்திரமாக்கி, எம் சந்ததிக்கு அர்ப்பணிப்பது எம் தலையாய பணியாகும்.

# மாவீரர் மாண்பு மடல்

## ஆலய மண்டபம் சேதம்

சுழிபுரம், நவ. 26
சுழிபுரம் பகுதியில் கடந்த தினமொன்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் புராதன ஆலயமான சுழிபுரம் வடக்கு சிவன் ஆலய மகாமண்டபமும், அர்த்தமண்டபத்தின் சுவர்களும் சேதமடைந்துள்ளன. (ஓ- 28)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## சித்த மருத்துவத்துறை

1 ஆம், 2 ஆம், 3 ஆம், இறுதி பி. எஸ். எம். எஸ், மீள் பரீட்சை டிசம்பர் 1992

மேற்படி பரீட்சைகள் டிசம்பர் 21ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் அதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் சித்த மருத்துவத்துறைத் தலைவர் ஊடாக தமது விண்ணப்பங்களை டிசம்பர் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கிளைக்கு கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/3903)

# AIKAYES அறிவித்தல்

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கான
## வடபகுதி தனியார் உணவு விநியோகம்

எமது நோக்கத்தில் எதிர்பாராத இடையூறு கடந்த காலத்தில் காங்கேசன்துறை முகத்தில் ஏற்பட்டதால், பல இலட்ச ரூபாய்களை இழக்க வேண்டியேற்பட்ட போதும், நீண்ட நெடிய நெருக்கடிகளின் மத்தியிலும், மிக சிரமப்பட்டு நாம் எடுத்த பொறுப்பை எண்பத்தி ஐந்து வீதம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்பொழுது உங்களிடம் இறுதிக்கட்ட விநியோகத்திற்காக முன்வந்துள்ளோம்.

எமக்கு ஏற்பட்ட சோதனைகளைக் கருத்தில் கொண்டு உங்களின் நேயமான ஆதரவை ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

தயவு செய்து வெற்றுக் கலன்கள், வெற்றுப் பைகள், அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவற்றுடன் விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டு வரவும். கன்னாகத்திற்கு உங்களை அழைப்பதையிட்டு வருந்துகிறோம். வாராந்த சனிக்கிழமை விநியோகம் இன்றுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் (எடுக்கத் தவறியவர்களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | AIKAYES நாகம்மாள் சினிமா - முன் ஒழுங்கை, முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம். | 15-12-1992<br>17-12-1992<br>19-12-1992 | 8-00 — 5 00<br>8-00 — 5 00<br>8-00 — 5 00 |
| 2. நல்லூர் (எடுக்கத் தவறியவர்களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | ,, ,, ,, | 21-12-1992 | 8-00 — 5-00 |
| 3. பிற உ. அ. அ. பிரிவுகள் (எடுக்கத் தவறியவர்களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | ,, ,, ,, | 23-12-1992 | 8-00 — 5 00 |

**AIKAYES - JAFFNA.**
முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.

(சி-2522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ உயர்கட்டளைப் பீடத்தினர் பலியாவது

# தெற்கின் உயர்நிலை பிரமுகர்களின் மனோதிடத்தைச் சிதறடிக்கும்!

"சண்டே ஐலண்ட்" வார இதழில் தாராகி எழுதிய விமர்சனக் கட்டுரையின் தொகுப்பு இது:

அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ ஓர் இராணுவ இலக்காகும்.

கொழும்பு நகரின் மத்தியில் இராணுவத் தலைமையகத்துக்கு அருகில் அவரைக் கொலை கடைப்பிடிக்கப்பட்ட பாணி, யுத்தம் எங்கேயோ தொலைவில் நடத்தப்படுகின்றது என்ற நினைப்புடன் வாழும் உயர்நிலைப் பிரமுகர்களின் பாதுகாப்பு உணர்வுக்குக் கிடைத்த பலத்த அடியாகும்.

இராணுவ உயர்கட்டளைப் பீடத்தில் உள்ளவர்களைத் தெரிந்தெடுத்துக் கொல்வது, தெற்கில் உயர்நிலைப் பிரமுகர்களின் மனோதிடத்தைச் சிதறடிக்கச் செய்வதாகும்.

இது நடப்பின் அரசுக்கு எதிர்காலத்தில் நெருக்கடி ஏற்படும்:

தெற்கில் உள்ள உயர்நிலைப் பிரமுகர்கள் நேரடியாக அச்சுறுத்தப்படும் நிலை ஏற்படுமிடத்து —

வடக்கு, பின்னர் கிழக்கு பிரதேசங்கள் மீதான தமது அபிலாஷைகளை கைவிடும்படி அரசாங்கத்தை தெற்கில் உள்ள உயர்நிலைப் பிரமுகர்கள் நிர்ப்பந்திக்கலாம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு தென்பகுதி உயர்நிலைப் பிரமுகர்கள் உரிமை கோருவதை எப்படி கைவிடச் செய்யலாம்? — இந்தப் பாதையில் செல்வதற்கான ஆரம்ப முயற்சியே அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ கொலைச் சம்பவம் என்று தெரிகின்றது. (ஒ-எ)

## கொழும்பு காலிமுக வீதியில்

## தளபதி உயிரிழந்த செய்தி: சி.என்.என்.சேவை முந்தியது!

கொழும்பு, நவ 26

கடந்த 16 ஆம் திகதி காலிமுக வீதியில் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொலையுண்ட சம்பவத்தை உலகிற்கு முதலில் அறிவித்தது சி.என்.என் செய்திச் சேவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்தாக்குதலின் போது படுகாயமிகளுக்குள்ளாகி பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்த லெப்டினன்ட் குணசேகரவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவதற்கு முன்னர் சி.என்.என். டெலிவிஷன், தளபதி உயிரிழந்ததை உலகிற்கு அறிவித்து விட்டது.

செய்மதி ஊடாக இச்செய்தி உலகிற்குத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# ஜே.வி.பி. இயக்கத்தில் தமிழ் இளைஞர்களும்!

## நானுஓயாவில் சிலர் கைது

ஜே.வி.பி. இயக்கத்தில் தமிழ் இளைஞர்களும் சேர்ந்து வருவதாக 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.வி.பி: இயக்கத்துக்காக சில கொள்ளைகளை நடத்தியதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர்கள் குழு ஒன்றை நானுஓயாப் பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

நானுஓயாப் பகுதியில் இந்த எட்டுத் தமிழ் இளைஞர்களும் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர் என இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப தமிழ் இளைஞர்களுக்கு உடந்தையாக சிங்கள இளைஞர்கள் செயல்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறினார்கள். (ஒ-எ)

## பிரபா பிறந்த தினத்தில் தாக்குதல்கள் நடக்கலாம்

### படை வட்டாரங்கள் எச்சரிக்கை

கொழும்பு. நவ. 26

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளான இன்று கொழும்பிலும் இதர பகுதிகளிலும் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டி இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது;

எனவே இந்த வாரத்தில் கொழும்பில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்கலாம் என்றும் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. (உ-த)

## றேடியோ குண்டு வெடித்து மட்டுநகரில் தமிழர் பலி

கொழும்பு, நவ; 26

வானொலிப் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று திடீரென வெடித்ததில் வானொலிப் பெட்டி திருத்தும் கடை உரிமையாளரான தமிழர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வானொலி திருத்தும் கடை ஒன்றிலேயே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

திருமலை கட்டைபறிச்சானைச் சேர்ந்த வேலுக்குட்டி ஆனந்தன் (வயது 26) என்பவரே பலியானவர் ஆவார்;

## தீவுப்பகுதி கப்பல் சேவை: 87 பயணிகள் மட்டுமே!

திருகோணமலை, நவ. 26

திருகோணமலையில் இருந்து தீவுப்பகுதிக்கான கப்பல் சேவை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான போது 87 பயணிகள் அதில் பயணம் செய்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

150 இருக்கை வசதிகள் கொண்ட இக் கப்பல் மூலம் 10 மணித்தியாலத்தில் காரைநகர் சென்றடைய முடியும் என்றும்—

சிங்கப்பூர் கப்பல் கம்பனிக்குச் சொந்தமான இந்தக் கப்பலுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 740 அமெரிக்க டொலர்கள் வாடகைக் கட்டணமாக செலுத்தப்படுகின்றது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக் கப்பலுடன் கூடவே 'தாரா' என்ற சரக்குக் கப்பல் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்கிறது என்றும், கடற்படைக் கப்பல் ஒன்று அதற்குப் பாதுகாப்பாகச் செல்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது; (ஒ-த)

## கொழும்பு நகரின்

# முக்கிய இலக்குகளில் புலிகளின் ஆட்கள்!

கொழும்பு, நவ. 26

கொழும்பு மாநகரின் முக்கிய இலக்குகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது ஆட்களை வைத்துள்ளது என்றும்—

அந்த ஆட்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் உத்தரவிடுவது தான் பாக்கி என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமது இராணுவ மேலாண்மையை நிலைநாட்டுவதற்காக விடுதலைப் புலிகள் அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் கொழும்பு நகரில் தாக்குதலை நடத்தக்கூடும் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

## றொனி மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படமாட்டா

### நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

முன்னாள் நிதியமைச்சர் றொனி டீ மெல் மீதான வழக்குகள் வாபஸ்பெறமாட்டா. அவர் நாடு திரும்பும் பட்சத்தில் வழமையான சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டீ மெல்லின் வருகையைத் தொடர்ந்து திரு. டி. பி. விஜேதுங்கா பிரதமர் பதவியை இழப்பார் என்று கொழும்பில் பலத்த வதந்தி அடிபடுவது தெரிந்ததே.

இவ்வதந்தியில் உண்மையுள்ளதா? என்று கேட்டபோது, திரு. விஜேதுங்கா, "அப்படியில்லை. நான் தொடர்ந்தும் அரசில் இரண்டாவது இடத்திலேயே தொடருவேன். ஆனால் பல அமைச்சுகளை இனி நான் சுமக்காமல் இருக்கலாம்" என்று புன்சிரிப்புடன் கூறினார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ-த)

### ராஜகாரியர் நீக்கப்பட்டார்

கொழும்பு, நவ 26

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் பொன். ராம் ராஜகாரியர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிவித்துள்ளது. (உ-த)

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள்

யாழ்ப்பாணம். நவ; 26

கோப்பாய். பலாலி ஆசிரிய கலாசாலைகளின் இறுதிப் பரீட்சைகள் அடுத்தமாதம் 18ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இந்தப் பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்கள் விமானம் மூலம் அனுப்பப்படும் என்று பரீட்சை ஆணையாளர் யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்; (ஒ-162)


மாவீரர் வார சிந்தனை



★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது; எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் எனக்கு சுவையான உணவைத் தந்து என் பசியைத் தீர்த்து வைக்கிறது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகிறது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் நான் களைத்திருக்கும் போதெல்லாம் எனக்கு படுக்கையாக அமைகிறது."

"இந்தமண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன்; ஏனெனில் இந்த மண் நான் அயர்ச்சியடையும் போது தனது அற்புதமான இயற்கை எழிலால் எனக்குப் புத்துயிரூட்டுகிறது."

— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.



வாடிக்கையாளர்களுக்கு;

ஒரு முக்கிய அறிவித்தல்

இணுவிலை பிரதான வீதியில் இயங்கிவந்த மைதிலி நகை அலங்காரிப்பு நிலையம் 29 - 11 - 1992 தொடக்கம் கே. கே. எஸ். வீதி கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்;

உரிமையாளர்,
இ. சுப்பிரமணியம்.

(5598)



விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

கலை, வர்த்தகம் 94

புதிய இறுதி பிரிவு ஆரம்பம்: 29 - 11 - 1992

9 00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு: கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு: தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ புதிய பிரிவு அலகு I இல் இருந்து ஆரம்பமாகும்.

(இ-3797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வேப்ப மரப்பலகையில் செய்யப்பட்ட உடுப்பு வைக்கும் அலுமாரி, பப்பாசி ஏசியா ¾ சைக்கிள், றோணியோ இயந்திரம் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு 65 (185), பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(5592)

## கலண்டர் விற்பனைக்கு

1993 ஆம் ஆண்டிற்கான மெய்கண்டான், லீலா, அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன; பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி-3785)

## O/L Dec. 1992

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், சித்திரம், நடனம், சங்கீதம், விவசாயம், மனைப்பொருளியல் பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond - Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3883)

## இலவச திருமண சேவை

37 வயது, சித்திரை, செவ்வாய் - 7, U. K. இல் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. U. K. இல் இருப்பவர்/பெண் அனுப்ப விரும்புவர், விண்ணப்பிக்கலாம், தொடர்பு: ஞாயிறு காலையில், அ. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(5594)

## தேவை

உடுவில் Y. M. C. A க்கு சைக்கிள் திருத்துனர் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். தொடர்பு: உடுவில் Y. M. C. A. மகளிர் கல்லூரிக்கு முன்பாக.

(23386)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் விருத்தியாகுமா? உடல் நோய், மனக்கவலை என்பன தீருமா? கேட்டுப்பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884 கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(23381)

## பகுதிநேர இலிகிதர்

வர்த்தகத் துறையில் க. பொ. த உயர்தர பரீட்சையில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்த உயர் கல்வியில் ஆர்வமுடையவர்கள் தேவை. இலக்கம் 140, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்.

(5599)

## கிராமசேவையாளர் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, நவ. 26

கிராம சேவையாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களம் இத்தகவலைத் தெரிவித்தது.

இப் பரீட்சைக்கு 50 ஆயிரத்து 992 பேர் தோற்றினர். 15 ஆயிரம் பேர் சித்தியடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

(உ-த)

---

தமிழீழ தேசியத் தலைவர்

# பிரபாகரனுக்கு

## எமது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

வீரத் திருமகனே வாழி வாழி
வெற்றிக் கொடியசைத்தோய் வாழி வாழி
ஈர நெஞ்சினனே வாழி வாழி
ஈழத் தவப் புதல்வா வாழி வாழி
பேரன்புடையோனே வாழி வாழி
தலைவா நீ வாழி வாழி
பாரில் புகழுடனே வாழி வாழி
பல்லாண்டு காலம் நீ வாழி வாழி!

ஜனசக்தி சனசமூக நிலையத்தினர்,
கரணவாய் கிழக்கு.

(23371)

---

# புதிய கல்வி நிலையம்

219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கல்வி ஆண்டு - 1993

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை
(சகல பாடங்களும்)

★ திறமை, அனுபவம் மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

பயிற்சிப் பரீட்சைகள்
ஆரம்பம்: 01 - 12 - 1992
(செவ்வாய்) பி. ப. 3 00 மணி

● அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(23374)

---

# கண்ணீர் அஞ்சலி

## நாகநாதன் நிர்மலநாதன்

நிர்மலமானவனே - நீ
வாழ்க்கை வட்டத்தின்
இடையில் இறுதியானாய்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

— நண்பர்கள்.

சாவகச்சேரி.


(23387)

---

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
01
—
04
—
1934

மறைவு:
12
—
11
—
1992



அமரர்

## சுப்பையாமுதலி தங்கவேல்முதலி

(ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் - அடம்பன்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து, எங்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசெய்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

137, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(23377)

---

மண்ணிற்காய் மரணித்த
மாவீரரின் இப்புனித வாரத்திலேயே!

நாமும் ஒரு வருடத்தினை
நிறைவு செய்கின்றோம்
இக் குறுகிய காலத்தில் பெரும்
வளர்ச்சியடைய உறுதுணையாக
இருந்த
அன்பர்கள் அனைவருக்கும் எமது உளம்
பூர்வமான நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகல தமிழ், ஆங்கில
★ புத்தகங்கள்
★ சஞ்சிகைகள்
ஆகியவற்றை
நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும், தாங்கள் படித்து முடித்த புத்தகங்கள், சஞ்சிகைகளை நியாய விலையில் விற்பனை செய்யவும்,
இன்றே வாருங்கள்!

## ★ யாழ். பழைய புத்தகக்கடை ★

அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி,
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(23368)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கணக்கியல்

## S. K. பிரபாகரன்

93 பிரிவு I 2-00 - 4-00 ஆரம்பமாகிவிட்டது.
புதிய பிரிவு II 4-00—6-00 மணி.
94 புதிய பிரிவு II 1 00—2-00 மணி.

ஆரம்பம்: 29-11-1992

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி 3794)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி செல்வநாயகம் மகேஸ்வரி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 28 — 09 — 1913 | 27 — 10 — 1992 |

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், கலங்கரை விளக்காய் வாழ்ந்த குடும்பத்தின் குலவிளக்கே! உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலா. அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகள்.

உங்கள் பிரிவால் வாடும்;

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'மாணிக்கபதி',
மானிப்பாய்.

(5596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பேரினவாதத்தின் பிரதிநிதித்துவக் குரல்

வடக்கு-கிழக்கின் எல்லைப்புறக் கிராம மக்களின் பாதுகாப்பை அரசு பலப்படுத்த வேண்டும். மதவாச்சிப் பகுதி வரையிலும் அது விஸ்தரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் எம்.பியுமான திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி இருக்கிறார்.

அவரது தொகுதியான மதவாச்சி, தமிழர் தாயகத்தின் எல்லைப்புறத் தொகுதியாக இருப்பதாலும், எல்லைப்புறத்தைப் பாதுகாக்க முடியாத அளவுக்கு அரசாங்கம்— பாதுகாப்பு படையினர்— பலம் குன்றி இருப்பதாலும் திரு மைத்திரிபாலா இப்படி ஒரு கோரிக்கையை விடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நிலைமை வேறாக இருந்தது தடுக்கவோ, கேட்கவோ எவருமின்றி அரசாங்கமும், சிங்களப் பேரினவாதத்தின் முகவர்களும் அடர்ந்த காடாக இருந்த எல்லைப் புறங்களில் சிங்களக் குடியேற்றங்களைத் தாராளமாக உருவாக்கினர். அது மட்டுமா? தமிழர் தாயகத்திற்குள்ளும் அத்துமீறி சிங்களக் குடியேற்றங்களை உண்டாக்கினர்

தமிழர் தாயகத்தினைக் கபளீகரம் செய்தல் அதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிங்களவர்களுக்கும் சொந்தமானது என்ற நிலையை உருவாக்குவது. அத்தகைய தனி நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் தமிழர்கள் தமக்குத் தனியான தாயகம் உண்டென்று உரிமை கொண்டாடாமல் தடுப்பது தமிழீழம் வேண்டும் என்ற கோரிக்கையை நியாயமற்ற தாக்கிவிடுவது — இத்தகைய ஒரு பெரும் தொடர்ச்சங்கிலித் திட்டத்தின் செயல்வடிவே எல்லைப்புறங்களிலும், எல்லைகளின் எமது பக்கத்திலுமான சிங்களக் குடியேற்றங்கள்.

ஆனால் கொழும்பு அரசும், சிங்களப் பேரினவாதமும் நினைத்தது நடக்க முடியவில்லை எல்லைப்புறக் கிராமங்களில் பல தடவைகள் நடைபெற்ற அதிரடித் தாக்குதல்களால் அவற்றின் பாதுகாப்பு ஆட்டம் கண்டுள்ளது எல்லைப் புறங்களில் பணிபுரிய அமர்த்தப்பட்ட பாதுகாப்புப் படையினர் நிலை தடுமாறி உள்ளனர். ஊர்காவல் படையினர் அங்கு பணிபுரிய முடியாது என்று கூறி தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களையும் திருப்ப ஒப்படைத்துவிட்டு ஓட்டம் பிடிக்கின்றனர். கொழும்பின் உயர் வட்டாரங்களும், பத்திரிகைகளும் அதிர்ச்சியடையும் விதத்தில், குடியேற்றவாசிகள் பெரும் எண்ணிக்கையில் தமது இருப்பிடங்களை விட்டு அகன்று விட்டனர்!

அதனைத் தடுக்க வேண்டும் என்ற தவிப்பு சிங்களப் பேரினவாதத்துக்கு எழுவது இயற்கையே. அந்தத் தவிப்பினை, ஆதங்கத்தினை வெளிப்படுத்தும் பிரதிநிதித்துவக் குரலே மைத்திரியின் நாடாளுமன்றப் பேச்சு! தாங்களே வல்லவர்கள் என்று நினைத்தவர்களுக்கு எல்லைப்புறக் கிராமங்களுக்கு ஏற்பட்ட கதி நிச்சயம் கவலை தரத்தான் செய்யும்.

ஆனால் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டை முறியடிக்க, இல்லாமற் செய்துவிட எடுக்கப்படும் நியாயமற்ற, அநீதியான முயற்சிகள் பலனற்றுப் போகும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது உணர்வது நல்லது. பிறர்மண் கொள்வான் சென்று தன் மண்ணும் இழப்பான் என்று தமிழ் மூத்தோர்கள் சொன்னது பொய்க்குமா?

---

#### கலந்துரையாடலில் பலர் கருத்து:

# காணி உறுதிகளை எழுதும்போது நில வரைபடமும் இணைப்பது அவசியம்

### சச்சரவுகளைத் தவிர்க்க இதுவே வழி

யாழ்ப்பாணம், நவ 26

''காணிகள் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு மாற்றும்போது நில வரைபடம் இன்றி உறுதிகள் எழுதப்படுகின்றன. இதனால் காணிப்பிரச்சினை எழக்கூடிய உருவாகி மக்களிடையே சச்சரவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே காணி எழுதும் போதும் — அவற்றை பதியும் போதும்— நில வரைபடம் அவசியம் என்ற கட்டுப்பாட்டை நடைமுறைக்கு கொண்டு வருவது நல்லது''

கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில், மேற்கண்ட கருத்து வலியுறுத்தப்பட்டது.

நில அளவை ஒருமிணைப்புக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ''தேசத்தின் அபிவிருத்திக்கு நில வரைபடம் அத்தியாவசியமானது'' என்ற தலைப்பிலான கருத்தரங்கிலேயே மேற்படி கருத்து பலராலும் வலியுறுத்திக் கூறப்பட்டது

யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன் தலைமையில் நடந்த இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலாநாயகம், யாழ். நில அளவையாளர் சங்கத் தலைவர் திரு. சத்தியாப்பிள்ளை, யாழ். மாவட்ட மேலதிக காணிப்பதிவாளர் திரு: போமன், ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர் திரு. செல்லரத்தினம் உட்படப் பலர் மேற்படி கருத்து தொடர்பான பல்வேறு விளக்கங்களை எடுத்துக் கூறினர்

''பொது மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தற்கால நடவடிக்கைக்கு ஏற்றவாறு காணி விதிகள் புனரமைக்கப்படவேண்டியது அவசியம்'' என சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் கருத்து தெரிவித்தார்.

''மாணவர்கள் தம் இளம் பராயத்தில் இருந்து நில அளவை, நிலவரைபடம் ஆகியவற்றில் தமது அறிவை செய்முறையில் விருத்தி செய்யத் தேவையான கல்வித் திட்டத்தைத் தயாரிக்க ஒரு குழுவை நியமிக்கவேண்டும்'' என்று யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கருத்து வெளியிட்டார்.

''நில அளவையில் உயர் அறிவைப்பெற நில அளவைக் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டும்'' என்று முன்னாள் நில அளவை உதவி அத்தியட்சகர் திரு. தருமராசா கூறினார்.

விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் மற்றும் நில அளவைத் துறையில் அனுபவம் பெற்ற பலரும் கருத்துரை வழங்கினார்கள். (ஒ-8)

---



# வேங்கை வேந்தன்

★★ ✦ ★★

மண்ணினில் தமிழர் வாழ்வு.
மாட்சியும் மதிப்பும் எய்த
பண்ணரும் பணிகள் யாவும்
பக்குவ மாகச் செய்து,
கண்ணிய மையோர் நாடு
கண்டுநம் இனமும் ஓங்கத்
திண்ணிய தாகத் தேர்ந்து
செந்தமிழ் ஈழம் காண
எண்ணியோர் உறுதி கொண்டு
ஏற்றதோர் கருமம் செய்ய
வண்ணமும் வலியும் பெற்று
வரமெல்லாம் உரமாய் ஏற்று,
மண்ணினில் உள்ளோர் எல்லாம்
மாண்புற ஏற்றிப் போற்றும்
விண்ணைய் வந்தான் பிரபா
கரனெனும் வேங்கை வேந்தன்

— முருகனடியான்.

---

# பெண்ணின் சங்கிலி அபேஸ்! கணவனுக்கு கத்திக்குத்து!!

### பூக்கன்றுகளுக்குள் ஒளித்திருந்து கொள்ளை

கோண்டாவில் கிழக்கில் கொள்ளைக் கோஷ்டியினர் துணிகரமான முறையில் வீட்டினுள் புகுந்து பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்!

போகும்போது கொள்ளையர்கள் சும்மா போகவில்லை. பெண்ணின் கணவரைக் கத்தியால் குத்திவிட்டுச் சென்றுள்ளனர்!!

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெரியவளையா புலேந்திரன் என்பவரது வீட்டிலேயே இரவு 7 30 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;-

சம்பவதினம் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வீட்டுக்காரர் ''கேற்''றைப் பூட்டச் சென்றார். அப்போது பூக்கன்றுக்குள் ஒளித்திருந்தவர்களில் ஒருவர் அவரை பின் பக்கத்தால் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

அப்போது கொள்ளையர்களில் மற்றொருவர் வீட்டினுள் பாய்ந்தார். வீட்டின் உள்ளே கொள்ளைக்காரனைக் கண்டு வீட்டுக்காரரின் மனைவி கூக்குரல் எழுப்பினார்.

கூக்குரலால் பலன் ஏதும் கிட்டவில்லை. அவர் அணிந்திருந்த சுமார் மூன்று பவுண் நிறையுடைய சங்கிலி பறித்தெடுக்கப்பட்டது.

கொள்ளையர்கள் போகும் பொழுது அவரது கணவரின் கையில் கத்தியால் குத்திவிட்டு ''கம்பிநீட்டி''விட்டனர்.

காயமடைந்த வீட்டுக்காரரான பொ, புலேந்திரன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றார். (ஒ-15)

---

# மாவீரர் வாரத்தை ஒட்டி இன்று சிரமதானங்கள்

யாழ்ப்பாணம், நவ: 26

இன்று நடைபெறவுள்ள மாவீரர் வாரத்தை ஒட்டி சிரமதானப் பணிகள் பரவலாக பல இடங்களிலும் இடம் பெறவுள்ளன.

சிரமதானப் பணிகளில் பருத்தித்துறை ப நோ, கூ. சங்கம், சாவகச்சேரி நகர சபை, நல்லூர் பிரதேச சபை, வலி. கிழக்கு பிரதேச சபை, வலி மேற்கு பிரதேச சபை, வலி. வடக்கு பிரதேச சபை ஆகியவையும்—

சாவகச்சேரி பிரதேச சபை, பருத்தித்துறை நகர சபை, கட்டடத்திணைக்களம், கரவெட்டி அஞ்சலகம் ஆகியவையும்—

கோப்பாய் உ: அ. அ. அலுவலகம், நல்லூர் உ. அ. அ. அலுவலகம், யாழ்ப்பாணம் உ. அ அ. அலுவலகம், உடுவில் உ. அ. அ, அலுவலகம், தெல்லிப்பழை உ. அ. அ; அலுவலகம், சங்கானை உ. அ. அ. அலுவலகம், சண்டிலிப்பாய் உ. அ. அ அலுவலகம், மருதங்கேணி உ. அ. அ. அலுவலகம் ஆகியவையும்—கலந்து கொள்கின்றன.

அலுவலகங்களைத் துப்புரவு செய்தல், மயானங்கள், வீதிகள், வளவுகள் போன்றவற்றை துப்புரவு செய்தல், மரம் நடுகை போன்ற பல்வேறு சிரமதானப் பணிகள் இடம்பெறும். (ஒ)

---

# மாவீரர் நாள் - 1992

### மாவீரர்களே!

எத்தனை துயரதை இம்மண் சுமந்தும் - தமிழ்
ஈழம் நெருப்பெனப் பொங்கிச் சிவந்தும்
வித்தான மாவீரர் தாகம் தணியும் - வெற்றிச்
சிங்கள நாளையெம் காலில் பணியும்.

— தமிழீழ மாவீரர் பணிமனை.

---

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பிரபாகரா — எமதரும் மகனாகினாய்
திழத்தரு — மரமாகினாய்
தமிழரின் — வரமாகினாய்

புவிமீதிலே — சீறிடும் புலியாகினாய்
அருள்பெருகு — புகழோடு நீ
அவனியில் — பொலிவோடு வாழ்!

தமிழீழத் தாய் — தந்த எம் தலைவா உனை
அன்னையர் — அமிழ்தாகவே
போற்றினர் — அரசாக வாழ்!

நூறாண்டுகள் — உடலில் நோய் நொடியின்றியே
உன்பலம் — மாறாமலே
மைந்த உன் — மனம் போல வாழ்!

ந. மனோன்மணி

---

#### இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

# வெளிநாட்டு முயற்சிக்கு அவசியம் ஏதும் எழவில்லை

### சபையில் பிரதமர் விஜேதுங்க

கொழும்பு, ந. 26

'இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் வெளிநாட்டு முயற்சிக்கு அவசியம் ஏதும் எழவில்லை'

பிரதமரும் நிதி அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு டி. பி. விஜேதுங்க நாடாளுமன்றத்தில் திங்கள் மாலை முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே இது விஷயத்தில் வெளிநாட்டு முயற்சிக்கு அவசியம் எழவில்லை என்றும் அவர் கூறினார். (ஓ-ஏ)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ, 26

யாழ் மாவட்டத்தில் சட்டம், சட்டத்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். யாழ். மாவட்டத்திலுள்ள சட்ட அறிஞர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமணவில் இம் முறை குறைந்த அளவு தபால்கள்

யாழ்ப்பாணம், நவ 26

கட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே இம்முறை 'குமண' கப்பலில் குறைந்த எண்ணிக்கையான தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

வான் கடிதங்கள் மட்டும் அடங்கிய 62 தபால் பொதிகள் மட்டுமே குமண கப்பலில் இம்முறை எடுத்து வரப்பட்டுள்ளன; பதிவுத் தபால்களோ வெளிமாவட்டக் கடிதங்களோ இம்முறை எடுத்து வரப்படவில்லை.

பருத்தித்துறையில் இருந்து நேற்று அந்தத் தபால் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

மேற்படி 62 தபால் பொதிகளையும் கப்பலில் ஏற்றுவதற்கு முதலில் அனுமதி பெறப்பட்டிருந்தது என்றும்—

அதன் பின்னர் பதிவுத் தபால்கள், வெளிமாவட்டக் கடிதங்கள் அடங்கிய சுமார் 300 பொதிகளை கப்பலில் ஏற்ற அனுமதி கோரப்பட்டிருந்ததாகவும் —

ஆனால் கட்டுப் படைத் தலைமையகத்தின் அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்படவே குமண கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டதாகவும் தெரியவந்தது.

நேற்று எடுத்து வரப்பட்ட 62 வான் கடிதப் பொதிகளும் யாழ் பிரதம தபாலகத்துக்கு குவியலை என்றும் அவற்றைத் தரம் பிரித்து விநியோகிக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என்றும் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-17-5)

# ரஞ்சனுக்கு 6 லட்சம் ரூபா; கொபபேக்கு ரூ.75 ஆயிரமா?

கொழும்பு. நவ. 26

குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் குடும்பத்துக்கு ஆறு லட்சம் ரூபாவும்—

அரலி ... கண்ணி வெடியில் உயிரிழந்த கொப்பேகடுவவுக்கும் மற்றும் தளபதிகளுக்கும் தலா 75 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்பட்டிருப்பது படையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தை சுதந்திரக் கட்சி எம். பியான நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

(உ-எ)

## மரண அறிவித்தல்

### கைலாயஞ் செட்டியார் பழனிச்சாமி

கைலாயஞ் செட்டியார், சின்னம்மா தம்பதிகளின் புத்திரன் க. பழனிச்சாமி (முன்னாள் நெசவு மேற்பார்வையாளர், முன்னாள் அறங்காவலர், வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்) அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் லீலாவதியின் அன்புக் கணவரும் கௌரிதேவி, ஜெயதேவி, கௌசல்யாதேவி ஆகியோரின் தந்தையும், நிமலராஜா, சச்சிதானந்தம் ஆகியோரின் மாமனாரும், உதயகுமார், முத்துக்குமாரசாமி, கிருஷ்ணா, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பானுதேவி, துஷ்யந்தன், பானுரேகா, ஆராமுதன், விபூஷணன் ஆகியோரின் பேரனாரும், ஞ. சிவசுப்பிரமணியம், க. அருணாசலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு இன்று வியாழக்கிழமை (26-11-92) பகல் 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

தகவல்:
445, மணிக்கூட்டு வீதி, மு. சிவலோகநாதன்
யாழ்ப்பாணம். மு. சுவாமிநாதன்
[23389]

### திருமதி மனோன்மணி இராஜசூரியர்

திருமதி மனோன்மணி இராஜசூரியர் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் திரு கி. இராஜசூரியரின் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், [illegible] குமார், கலாநிதி (யாழ். தொழில் நிலையம்), தயாநிதி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), ஈஸ்வரகுமார் (முகாமையாளர், அக்ரோமடியன் லிமிட்.), குணநிதி, சாந்தநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

திருமதி சுகிர்தா - ஈஸ்வரகுமாரன், திரு. சு. சுந்தரலிங்கம் (லிபியா), நா. குலப்பிரகாசம் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), வே. [illegible] (யாழ். பல்கலைக்கழகம்) Dr கு. சாந்திகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்ற செல்லத்துரை, தமிழ்த்துறை பேராசிரியர் செல்வநாயகம், ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் இராசையா, ஓய்வுபெற்ற [illegible] ஆசிரியர் [illegible], இராசம்மா [illegible] ஆகியோரின் அன்புச் சகோதரியும்—

செந்தில், சோபனா, கவிதா, வனஜா, வாசதி, தீப [illegible], சரவணன், [illegible] ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் (இன்று) 26-11-92 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவர்களது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
44/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [23392]

# கூட்டம்

யாழ்ப்பாணம், நவ 26

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று இன்று வியாழன் முற்பகல் 11-30 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடை மற்றும் உணவுமுத்திரை சம்பந்தமான புள்ளி விபரங்களுடன் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-5)

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் கூட இன்று கொழும்பு மாநகரின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள பயமுறுத்தல் போன்ற நிலை ஏற்படவில்லை என்றும் "சண்டே ஐலண்ட்" தெரிவித்தது.

பொலீஸாரால் சந்தேகிக்கப்படும் தற்கொலைப் படையினர் இருவரில் ஒருவர் கொழும்பு நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை தற்கொலை செய்து கொண்டது. கொழும்பு மாநகரில் மேலும் பீதியைக் கிளப்பியிருக்கிறது.

'ரோய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இவ்வாறு தெரிவித்தது.

இதற்கிடையில் —

கொழும்பில் ஊடுருவியிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள், மாவீரர் வாரத்தை ஒட்டியும், தலைவர் பிரபாகரனின் இன்றைய பிறந்த நாளை ஒட்டியும் திடீர் தாக்குதல்களை நடத்தலாம் என இராணுவம் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் தலைநகரின் பல பகுதிகளிலும் குவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற கட்டடத்துச் செல்லும் பாதை மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்றும் —

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பாதைகள் அனைத்திலும் பெருமளவு கொமாண்டோப் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-எ-6)

## குண்டை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவத்தையில் உள்ள தொடர்மாடி ஒன்றில் மாதம் பத்தாயிரம் ரூபா வாடகை செலுத்தி இவர் தங்கி இருந்தார் என்றும்—

கொழும்பில் விடுதலைப் புலிகளின் குண்டுகளைப் பொருத்தி அமைக்கும் பிரதான நிலையமாக இது விளங்கி வந்துள்ளது என்றும்—

அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவைக் கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட குண்டும் இந்த இடத்தில் வைத்தே விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதல் படையினரால் பொருத்தப்பட்டது என்றும்—

குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் இந்த இடத்தைச் சோதனையிட்டு குண்டுகளைப் பொருத்தப் பயன்படுத்தப்பட்ட கருவிகளைக் கண்டு பிடித்தனர் என்றும்—பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நபர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளும் இங்கிருந்து கைப்பற்றப்பட்டது.

திம்பிரிகஸ்யாயப் பகுதியில் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவரைச் சுட்ட சம்பவத்துக்கும் இவரே பொறுப்பு [illegible]

(இ-எ)

# ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கிளிநொச்சிக்கு

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கிளிநொச்சியில் வெளியாகியுள்ளன.

கிளிநொச்சிக் கோட்டத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளிலும் மொத்தம் 37 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

புனித திரேசா மகளிர் மகாவித்தியாலய மாணவன் சஞ்ஜீவன் இக் கோட்டத்தணிப் பாடசாலையில் 170 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த 37 மாணவர்களில் 15 பேர் திருவையாறு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ். மாவட்டத்துக்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ 97)

## போட்டிப் பரீட்சை 28 ஆம் திகதி

அரசாங்கசேவை, மாகாண அரசாங்க சேவை, அரசாங்க கூட்டுத்தாபன சேவை ஆகியவற்றில் சுருக்கெழுத்தாளர்களையும் தட்டெழுத்தாளர்களையும் சேர்த்துக் கொள்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் அடையாளங்களை உறுதிப்படுத்தி தமது அனுமதி அட்டைகளை யாழ் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு: இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

(இ-5)

## சந்திப்பு

கொழும்பு. நவ. 26

புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மொஹான் சமரசேகரா நேற்று ஜனாதிபதி பிரேமதாஸாவை அவரது அலுவலகத்தில் உத்தியோக பூர்வமாகச் சந்தித்தார்.

(இ-எ)

## சித்த மருத்துவம் தனிப்பிரிவாக்க முயற்சி

யாழ்ப்பாணம், நவ 26

தற்போது கலைப்பீடத்தின் ஓர் அங்கமாக இயங்கி வரும் யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறையை தனிப் பிரிவாக செயற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவை கடந்த 21 ஆம் திகதி கூடிய சமயம் இம்முடிவு எடுக்கப்பட்டது.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு சித்த மருத்துவத் துறையை தனிப்பிரிவாக செயல்படுத்த அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(இ-3)

## நினைவெலியுடன்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நினைவொலி - அஞ்சலியைத் தொடர்ந்து இன்று நள்ளிரவு 12மணி 2நிமிடமாகும் போது மாவீரர் சுடரேற்றும் வைபவம் இடம்பெறும். தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் அந்தந்தப் பகுதியில் வீரச்சாவெய்திய மாவீரர் அனைவருக்குமான சுடரேற்றப்படும்; மக்கள் சூழ நிற்க, விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரமுகர்கள் மத்திய சுடரை ஏற்றுவர். சமவேளையில் மாவீரரின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை ஏற்றுவார்கள்; சமகாலத்தில் எல்லா வீடுகளின் வாசல்களிலும் மாவீரர் சுடரை மக்கள் ஏற்றுவர். கட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் பெரும் எண்ணிக்கையான விளக்குகள் ஏற்றி மாவீரரின் தியாகம் நினைவு கூரப்படும்.

இதேவேளை மாவீரர் வாரத்தின் ஐந்தாம் நாளான நேற்று குடாநாடெங்கும் மேலும் பல இடங்களில் மாவீரர் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நேற்றைய தினம் சனசமூக நிலையங்கள், கூட்டுறவு சங்கங்கள், தனியார் அலுவலகங்களைச் சேர்ந்தவர்கள் சிவப்பு மஞ்சள் பட்டிகள் அணிந்து செல்வதைக் காணமுடிந்தது.

### மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் பலவும் நடைபெற்றன. தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் மாவீரர்களின் பெற்றோர் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டார்கள்.

கட்டைவேலி வாழ் மாவீரர்களின் பெற்றோருக்கான பாராட்டுவிழாவும் கௌரவிப்பும் நேற்று கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் நடைபெற்றது. கோயிற்கடவை பிள்ளையார் கோவிலிலிருந்து மாவீரர்களின் பெற்றோர் பான்ட் வாத்தியம் சகிதம் விழா மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இன்று நள்ளிரவு மாவீரர் சுடர் ஏற்றும் வைபவம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. தென்மராட்சி - பச்சிலைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த 809 மாவீரர்களின் பெற்றோரும் தென் தமிழீழத்தைச் சேர்ந்த 101 மாவீரர்களின் பெற்றோர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

மாவீரர்களின் இப்பெற்றோர்கள் இன்று பிற்பகல் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

(அ-17-117-118-15)

## மாவீரர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடி மறைந்த வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மக்கள் அஞ்சலிகளைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அவற்றில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### சுன்னாகத்தில்

வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த 21 போராளிகளின் புகழுடல்கள் சுன்னாகம் மத்திய சந்தை மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வலிகாமத்தின் பல பகுதிகளில் இருந்தும் வந்து திரண்ட மாணவர்களும் பொதுமக்களும் மறைந்த வீரர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வினையொட்டி சுன்னாகம் வர்த்தக நிலையங்கள் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டன.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அஞ்சலிக் கூட்டம் முடிந்த பின்னர் மாவீரர்களின் புகழுடல்கள் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விதைக்கப்பட்டன.

'பாண்ட்' வாத்தியங்களுடன் போராளிகளும், மாணவர்களும் ஊர்திகளின் பின்னேயும் முன்னேயும் அணிவகுத்துச் சென்றனர்.

புகழுடல்கள் எடுத்துச் செல்லப்பட்ட வழிகளில் மக்கள் மலர்தூவி அஞ்சலி செய்தனர்.

(இ-117-152-3-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இல் உள்ள அச்சகத்தில் 26-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org